**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006**

**பத்தாம் வகுப்பு ஜூலை 2026**

**பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள்/ சிறப்பு தக்கல் முறையில் விண்ணப்பங்கள் பதிவேற்ற சிறப்பு வாய்ப்பு அளித்தல்**

**செய்திக் குறிப்பு**

நடைபெறவுள்ள ஜூலை 2026, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கத் தவறிய தகுதியான பள்ளி மாணவர்கள்/ தனித்தேர்வர்களிடமிருந்து மீளவும் சிறப்பு தக்கல் முறையில் மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் வாயிலாக இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சிறப்பு தக்கல் (சிறப்பு அனுமதி) முறையில் விண்ணப்பிப்பதற்கான நாட்கள்:**

பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளியிலும், தனித்தேர்வர்கள் அரசு சேவை மையங்களிலும் நேரடியாக சென்று இணையதளம் மூலம் விண்ணப்பிக்க 26.05.2026 (செவ்வாய்க்கிழமை) முதல் 06.06.2026 (சனிக்கிழமை) வரையிலான நாட்களிலும், மேற்காண் நாட்களில் விண்ணப்பிக்க தவறியவர்கள் சிறப்பு அனுமதி திட்டத்தில் 09.06.2026 (செவ்வாய்க்கிழமை) மற்றும் 10.06.2026 (புதன்கிழமை) ஆகிய நாட்களில் விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டது. மீளவும் தேர்வர்களின் நலன்கருதி மேற்காண் கால அவகாசம் 11.06.2026 (வியாழக்கிழமை) அன்று ஒரு நாள் மட்டும் நீட்டிக்கப்பட்டது.

தற்போது மீளவும் 16.06.2026 (செவ்வாய் கிழமை) ஒரு நாள் மட்டும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை **பள்ளிகளில் பயின்று தோல்வியுற்றவர்கள் / வருகைபுரியாதவர்கள் மற்றும் தனித்தேர்வர்கள் அனைவரும் அந்தந்த மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு** உரிய ஆவணங்களுடன் (கடவுச்சீட்டு அளவு புகைப்படம் மற்றும் ஆதார் அட்டை நகல் கட்டாயம்) நேரில் சென்று தேர்வுக் கட்டணத்துடன் **கூடுதலாக ரூ.500 சிறப்பு கட்டணமாக** செலுத்தி ஆன்–லைனில் தக்கல் முறையில் விண்ணப்பிக்கலாம். இவ்வாய்ப்பு மீளவும் இரண்டாம் முறையாக தனித்தேர்வர்கள் நலன் கருதி வழங்கப்படுகிறது.

ஆன்–லைனில் விண்ணப்பங்களை பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், இவ்விவரங்களை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலகங்கள், மாவட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

கீழ்க்கண்ட மாவட்டங்களைச் சேர்ந்த தேர்வர்கள் மட்டும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்களில் விண்ணப்பிக்கவேண்டும்.

| **மாவட்டம்** | **விண்ணப்பிக்க வேண்டிய அ.தே.உதவி இயக்குநர் அலுவலகம்** |
|---|---|
| தென்காசி | திருநெல்வேலி |
| மயிலாடுதுறை, காரைக்கால் | நாகப்பட்டினம் |
| திருப்பத்தூர், ராணிப்பேட்டை | வேலூர் |
| புதுச்சேரி | கடலூர் |
| செங்கல்பட்டு | காஞ்சிபுரம் |
| கள்ளக்குறிச்சி | விழுப்புரம் |

**செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பித்தல்**

ஜூலை–2026 பத்தாம் வகுப்பு துணைத் தேர்விற்கு 26.05.2026 முதல் 09.06.2026 வரையிலான நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்களில் அறிவியல் செய்முறைத் தேர்வு பயிற்சி வகுப்பிற்கு பதிவு செய்ய வரும் தேர்வர்களில் **கருத்தியல் பாடங்கள் அனைத்திலும் தேர்ச்சிப் பெற்று அறிவியல் செய்முறைத் தேர்வை மட்டும் எழுதவுள்ள தேர்வர்களும்,** (தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பெற்றிட) கருத்தியல் தேர்விற்கு சேவை மையங்களில் விண்ணப்பிக்கும் நாட்களில் செய்முறை பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பித்த ஒப்புகைச்சீட்டை காண்பித்து அறிவியல் பாட கருத்தியல் தேர்விற்கு விண்ணப்பிக்க தேர்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. தற்போது, மேற்காண் நடைமுறையினைப் பின்பற்றி 16.06.2026 அன்று ஒரு நாள் மட்டும் சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) அலுவலகங்களில் அறிவியல் பாட செய்முறை பயிற்சி வகுப்பிற்கு விண்ணப்பித்திட மீளவும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**தேர்வுக்கால அட்டவணை**

ஜூலை 2026, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணைகளை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம்: சென்னை–6**
**நாள் : 15.06.2026**